**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 192/2020**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.10.2025 | | |
| பெயர்: | சலாவுதீன்<br>(PW–1 Cross con ) | தகப்பனார் பெயர்: | அப்துல் சலாம் |
| கிராமம்: | புத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 28.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.57)**

1. எனது தாயார் ஜன்னத்நிஷா கடந்த 2010ம் வருடம் காலமாகிவிட்டார். எனது தாயார் 1,2 பிரதிவாதிகளுக்கு 21.03.2005ல் செட்டில்மெண்ட் எழுதிவைத்த தேதி முதல் நாளது தேதிவரையில் அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையும் அனுபவமுமில்லை என்றால் எனது தாயார் இறந்த பிறகு என்னிடம் தான் அனுபவமும், உரிமையும் இருந்து வருகிறது.

2. வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ளதால் நேரில் பார்த்து விசாரணை செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது. சோதியக்குடியை சேர்ந்த கிருஷ்ணன் மகன் கென்னடி என்பவர் யார் என்றால் அவர் நிருபர் ஆவார். வா.சா.ஆ.1 ஆவணம் நான் நேரடியாக மனு கொடுத்து பெறவில்லை என்றால் இல்லை, நான் கூறி கென்னடி என்பவரால் மனு கொடுக்கப்பட்டது.

3. வா.சா.ஆ.1 ஆவணம் என்னாலும், கென்னடியாலும் சேர்ந்து மோசடியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் சிட்டா அடங்கலின் அசலை பார்த்தால்தான் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரியல்ல. கென்னடி என்பவர் மனு தாக்கல் செய்த மனுவின் அலுவலக நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு நேரடியாக கொடுக்கப்பட்டது. வருவாய் துறை அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியர் சக்தி என்பவரால் கென்னடிக்கு நேரடியாக கொடுக்கப்பட்டது.

4. வா.சா.ஆ.1 ஆவணம் என்னாலும், கென்னடியாலும், மண்டல துணை வட்டாட்சியராலும் சேர்ந்து மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் என்பது எனது தாயாருக்கு தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பானர் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4, வா.சா.ஆ.7 ஆவணங்கள் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்திற்கு உரியதல்ல என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தில் எந்த காலத்திலும் எனக்கு அனுபவமும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்திலும் உரிமையிலும் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கான வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 14.21)**